**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 134/2018**

நாள் 16.10.2024

DW1 – தமிழ்ச்செல்வன்
த/பெ – காளியப்பன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of October 2024.)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. சுப்பிரமணிக்கு சொத்தை விற்கும் பொழுது அதில் ரேவதி கையொப்பம் போடவேண்டி வர மறுத்து விட்டார் என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த கிரைய பத்திரத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன். அப்போது ரேவதியை என்ன சொல்லி அங்கு அழைத்து வந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. அந்த கிரைய பத்திரம் ஏற்பட்ட போது பெருந்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த பாக தாவா நிலுவையில் இருந்ததா என்றால் இல்லை. எனது அப்பா பெயரில் வா.சா.ஆ.5 கிரைய பத்திரம் ஏற்பட்ட போது அந்த சொத்தில் ரேவதிக்கு பாகம் தருவதாகத்தான் கூறித்தான் சமாதானம் பேசி வா.சா.ஆ.8 ஆவணத்தில் கைபொப்பம் வாதி ரேவதியை அழைத்து வந்தார்கள் என்றால் இல்லை. அந்த விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும் என்றும் இருந்தும் இந்த வழக்கிற்காக வேண்டி பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நாங்கள் அவ்வாறு சமாதானம் பேசியதின் பேரில் தான் ரேவதி தாக்கல் செய்திருந்த பாக தாவாவை நடத்தாமல் விட்டு விட்டார் என்று

சொன்னால் சரியல்ல. எனது அப்பா பெயரில் வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் ஏற்பட்டு ஒரு ஆண்டுக்குள்ளாகவே அசல் வழக்கு எண். 108/1999 என்ற வழக்கை ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் பாக தாவாவை தாக்கல் செய்துவிட்டால் என்ாறல் அது எனக்குத் தெரியாது. அந்த வழக்கு பற்றிய விபரம் எனக்கு எனது தந்தை இறந்த பின்னிட்டு தான் தெரிய வந்தது. அந்த பாக தாவாவில் வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தையும் சேர்த்து தான் தாக்கல் செய்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எனது அப்பா என்ன விவரங்களை சொல்லி எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தார் என்றால் அது எனக்குத் தெரியாது. எனது அப்பா பெயரில் வா.சா.ஆ.5 கிரையம் பெற்ற சொத்து சம்பந்தமாக தாவா தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். அதற்கு பின்னிட்டு தான் வாதி ரேவதியை அந்த பாக தாவாவை வாபஸ் பெற வேண்டி வலியுறுத்தியதின் பேரில் தான் வழக்கை அவர் மேற்கொண்டு நடத்தாமல் விட்டு விட்டால் என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.5ல் கண்ட சொத்திற்கு நான்கு பக்க எல்கைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எல்கைகள் சொல்லாமலே நான்கு எல்கைகள் கொண்டு சொத்தை அனுபவித்து வருவதாக வழக்காடி வருகிறோம் என்றால் சரிதான். அதனால் சொத்திற்கு நான்கு மால் எல்கை சொல்லவில்லை என்ற போதிலும் சொத்தை அனுபவித்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் சொத்தை அடையாளம் காண முடியும் என்றால் சரியல்ல. அவ்வாறு சொத்தின் அடையாளத்தை காண முடியாது என்று சொன்னால் வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தின் படி அதில் கண்ட சொத்தின் சுவாதீனத்தில் நாங்கள் எடுத்திருக்கவே முடியாது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.8 ல் கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தானது பூர்வீகமாய் பாத்தியப்ட்ட சொத்து என்றும், அந்த சொத்து விற்பவர்களின் அனைவரின் கூட்டு சுவாதீன அனுபவித்திலும் இருந்து வருவதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் தாவா சொத்துக்கள் ரேவதிக்கும் பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

4. தாவா சொத்து ரேவதியின் கூட்டு அனுபவத்திலும் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதி ரேவதியிடம் தாவா சொத்தில் பாகம் தருவதாக சமாதானம் பேசியதின் பேரில் தான் வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தில் ரேவதி கையொப்பம் செய்தார் என்றும், அதனால் தான் வாதி ரேவதிஅவர் தாக்கல் செய்திருந்த பாக தாவாவை மேற்கொண்டு நடத்தாமல் விட்டு விட்டார் என்றும், ஆனால் நான் சொல்லியபடி, வா.சா.ஆ,8 கிரைய ஆவணம் ஏற்பட்ட பிறகு அவருக்கு சொத்தில் பாகம் தராததால் தான் ரேவதி இந்த பாக தாவாவை தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு உரிய கால வரையறைக்குள் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

5. வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பு சொத்துக்கள் சம்பந்தமாக வில்லங்க சான்று போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ஆவணம் அவர்களாகவே ஏற்படுத்தி கொண்டார்கள் என்று எதனடிப்படையில் எதிர்வாதத்தில் சொல்லியுள்ளேன் என்றால் அது எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.4 அடமான கடன் பத்திரம் பற்றி எனக்கு ஏற்கனவே நன்குதெரியும் என்றும், அவ்வாறு தெரிந்திருந்தும் அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியாது என்று இந்த வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.5

ஆவணத்தில் கண்ட சொத்தில் ரேவதிக்கு பாகம் உள்ளது என்பது வா.சா.ஆ.4 ஆவணம் மூலம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ. 5 ஆவணத்தில் ரேவதி கையொப்பம் எதுவும் செய்யாததாலும், அந்த ஆவணம் பற்றிய விவரம் ரேவதிக்கு தெரிய வரவில்லை என்றும் அதனால் அந்த ஆவணத்தை புறக்கணிக்கிறார் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும், சரியான நீதிமன்ற கட்டணத்தை தான் செலுத்தியுள்ளார் என்றும் சொன்னால் அது எனக்கு தெரியாது. வாதியும், தாவா சொத்தில் கூட்டு உரிமையாளர் என்ற முறையில் அந்த கூட்டு உரிமையை விளம்புகை செய்ய வேண்டி தனியாக பரிகாரம் கோர வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனது அப்பா பெயரில் 07.10.1998 தேதியில் வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் ஏற்பட்டு பின்னிட்டு 18.02.1999 தேதியிலேயே வாதி தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண். 108/1999 என்ற பாக தாவா வழக்கை நடத்தாமல் விட்டுவிட்டார் என்றும், அதற்கு பிறகு நான் பேசிய படி வாதிக்கு சொத்தில் பாகம் கொடுப்பதாக நான் சொன்னதின் பேரில் எனது பெயரில் வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தை அனைத்து கூட்டு பாகஸ்தர்களும் சேர்ந்து 15.11.2006 தேதியில் எழுதி கொடுத்தார்கள் என்றும், அதற்கு பின்னிட்டு நான் பேசிய படி பாகம் கொடுக்க மறுத்துவிட்டதால் தான் இந்த பாக தாவா வழக்கை 26.06.2012 தேதியில் பெருந்துறை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

7. அதனால் நான் வாதிக்கு பாகம் கொடுக்க முடியாது என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள எதிர்வாதமும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் நான் உண்மைக்கு மாறான வகையில் அளிக்கும் சாட்சியம் சட்டப்படி

ஏற்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> **: இல்லை**

Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.

Sd/-C.Senthil Kumar
Subordinate Judge,
Avinashi.